**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.243/2022

Deposition of witness for PW2

| | | |
|---|---|---|
| Name | : | ராமச்சந்திரன் |
| Father's Name | : | குருசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.02.2026

முதல் விசாரணை:

நான் கடையநல்லூர் நில அளவையராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் கடையநல்லூர் தாலுகா, மங்களாபுரம் கிராமம், கம்பனேரி புதுக்குடி பாகம் –2 சர்வே எண்.970/7–ற்கான அழைப்பாணையில் கோரிய ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

1. கடையநல்லூர் தாலுகா, மங்களாபுரம் கிராமம், கம்பனேரி புதுக்குடி பாகம் –2 சர்வே எண்.970/7 ன் புல வரைபடத்தின் அசல் எடுத்துவந்துள்ளேன். புல வரைபடத்தின் சான்றிட்ட நகலும், இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகலும் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. அழைப்பாணையில் கோரிய பட்டா மற்றும் மின் ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் பராமரிக்காததால் அதை என்னால் ஆஜர் செய்ய இயலவில்லை.

3. சா.சா.ஆ.1ன் அசல் புல வரைபடம் எந்த வருடம் தயார் செய்யப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது.

4. சா.சா.ஆ.1ற்கும், நீ.ம.சா.ஆ 3ற்கும் எவ்வாறு வேறுபாடு ஏற்பட்டது என்றால் இலவச பட்டா வழங்கும் போது உட்பிரிவு செய்யப்பட்டதால் மாறுதல் ஏற்பட்டிருக்கும்.

5. இலவச பட்டா வழங்கும் போது பாதை மற்றும் ரோடு ஒதுக்கப்பட்டு தான் உட்பிரிவு செய்யப்படும் என்றால் சரிதான்.

6. நீ.ம.சா.ஆ.2ல் 5 மீட்டர் பாதை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. நான் புல எண்.970/7–ஐ அளவீடு செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்

8. ஆணையருடன் அளவீடு செய்ய நான் செல்லாமல் வேறு நில அளவையர் சென்றதால் ஆணையர் அறிக்கை எவ்வாறு உள்ளது என்று எனக்குத் தெரியாது.

<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>

1. B ஸ்டோன் முதல் C ஸ்டோன் வரையிலான அளவு எவ்வளவு என்றால் 141.6 மீட்டர் ஆகும்.

2. புலவரைபடத்தின் அளவுத் திட்டப்படி 1:2 அதாவது 1 மி.மீ=2000 மி.மீ என்ற கணக்கில் வரையப்பட்டது. சாட்சியிடம் 15 செ.மீ அளவுள்ள

ஸ்கேல் கொடுக்கப்பட்டு புல வரைபடத்தில் B ஸ்டோன் முதல் C ஸ்டோன் வரையிலான அளவு சரியாக உள்ளதா என அளவீடு செய்யும் போது 70.8 மி.மீ உள்ளது. எனவே புலவரைபடத்தில் பிழை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

3. புலவரைபடத்தில் தவறு இருந்தால் மாவட்டவருவாய் அலுவலரின் பரிந்துரையின் பேரில் நில அளவையர் துணை இயக்குநர் உத்தரவின் பேரில் மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான்.

4. ஸ்தலத்தில் உள்ளபடி புல வரைபடம் உள்ளது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u>

1. பொதுவாக அனைத்து இடங்களிலும் புலவரைபடத்தின் படி ஸ்தலத்தில் இடம் இருக்காது என்றால் சரிதான் சில நேரங்களில் மாறுபடலாம்.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி